<u>சாதாரண கூட்டம்</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2022ம் ஆண்டு செப்டம்பர்** மாதம் 30 **நாள்** வெள்ளிக்கிழமை மாலை 05.00 **மணிக்கு நடைபெற்ற** சாதாரணக் **கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.09.2022 | **பொருள் எண் 1**<br>நகராட்சி ஆணையர் அவர்களது ஆகஸ்ட் 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 102 அனுமதிக்கப்பட்டது** |
| 30.09.2022 | **பொருள் எண் 2**<br>நகராட்சி பொறியாளர் அவர்களது ஆகஸ்ட் 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 103 அனுமதிக்கப்பட்டது** |
| 30.09.2022 | பொருள் எண் 3<br>இந்நகராட்சி கூத்தாநல்லூர் வட்டம் மற்றும் நகரம் இராமநாதன் கோவில் கிராமம், நகரளவை புல எண் 47/4 மற்றும் 47/5 (பழைய புல எண் 153/3A2, 175/5A) ல் மொத்த பரப்பு 4050 ச.மிட்டர் பரப்பளவு கொண்ட (ரயத்து நஞ்சை) நிலத்தில் 153.72 சதுர மீட்டரில் கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தகம் அமைந்துள்ள இடம் போக மீதமுள்ள 3896.28 சதுர மீட்டர் இடத்தில் கூத்தாநல்லூர் நகர ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடும் பொருட்டு நகரளவை பதிவேட்டில் மன்னார்குடி பஞ்சாயத்து யூனியன் ஆணையர் பெயரில் உள்ளதை கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தர தனி வட்டாட்சியர் நகர நிலவரி திட்டம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி தனி வட்டாட்சியர் மூலம் மன்னார்குடி பஞ்சாயத்து யூனியன் ஆணையரிடமிருந்து கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையர் பெயருக்கு மாற்றம் செய்ய ஒப்புதல் கடிதம் பெற்று விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டு கடிதம் வரப்பட்டுள்ளது. எனவே மன்னார்குடி யூனியன் ஆணையர் பெயரில் உள்ள மேற்படி இடத்தினை கூத்தாநல்லூர் ஆணையர் பெயரில் மாற்றம் செய்து கொள்ளவும், மன்னார்குடி யூனியன் ஆணையர் அவர்களது ஒப்புதல் கடிதம் பெறுவதற்கும் இம்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 572/2022/எச்1) | **தீர்மானம் எண்:- 104 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.09.2022 | **பொருள் எண் 4**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாய்க்கால்கள், குடிநீர் குழாய் பழுது பார்க்கும் பணிகளுக்கும் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் அவ்வப்போது தெரிவிக்கும் பணிகளை மேற்கொள்ளவும் ஒரு JCB இயந்திரம் தேவைப்படுகிறது. மேலும் எதிர்வரும் காலம் மழைக்காலமாக இருப்பதாலும் இது போன்ற பணிகளுக்கு நகர் மன்ற தீர்மான எண் 1011 நாள் 21.01.2022ல் அனுமதி பெற்று JCB இயந்திரம் வாடகைக்கு பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது, எனவே அப்பணிகளுக்கு கூடுதல் செலவினத் தொகை ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1, மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 288/2021/எச்1) | **தீர்மானம் எண்:- 105**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.09.2022 | **பொருள் எண் 5**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை செயல் திட்டம் சமர்பிக்க 10/029/2022 அன்று ஒருங்கிணைப்பு அலுவலர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி தூய்மை இந்தியா திட்டம், நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் மற்றும் இதர திட்டப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்பிக்க அடிக்கடி நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் போன்ற அலுவலகங்களுகக்கு செல்ல நேரிடுகிறது. அவ்வாறு அங்கு திட்ட அறிக்கைகளில் திருத்தம் உயர் அலுவலர்களால் திருத்தம் செய்யப்படும்போது மேற்படி திருத்தங்களை மேற்கொள்ள மடிக்கணினி தேவைப்படுகிறது. எனவே ஒரு புதிய மடிக்கணினி, வரைபடங்கள் வரைவதற்கு AUTO CAD SOFTWARE மற்றும் இதர உபகரணங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூபாய் ஒரு லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண் 062/2022/எச்1) | **தீர்மானம் எண்:- 106**<br>**அனுமதிக்கப்பட்டது** |

30.09.2022

பொருள் எண் 6

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான லைம் பவுடர், பிளிச்சிங் பவுடர் மற்றும் கையுறை, மழை தடுப்பு சட்டை, ஒளிரும் சட்டை இதர பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு 07.09.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ செல்வ விநாயகா டிரேடர்ஸ் சென்னை | 600000 | 596200 | 0.63% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | சன் பிரைட் டூல்ஸ் சென்னை | | 611860 | 1.99% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள. ஸ்ரீ செல்வ விநாயகா டிரேடர்ஸ் சென்னை என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.63% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.022/2022/எச்1)

தீர்மானம் எண்:- 107
அனுமதிக்கப்பட்டது

---

30.09.2022

பொருள் எண் 7

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் நகரத் தூய்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து சுத்தமான பசுமையான மற்றும் நீடித்த சுற்றுச்சூழலை உறுதி செய்யும் பொருட்டு நகரங்களில் பெரும் அளவிலான மக்கள் பங்கேற்புடன் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மை பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் வாட்ஸ்-அப் செய்தியின்படி விழிப்புணர்வு பாடல், நகராட்சி மூலம் ஒளிபரப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஆம்பிளிபயர், ஸ்பீக்கர், மைக், பேட்டரி ஆகியவை தேவைப்படுகிறது. மேலும் நகராட்சியில் நடைபெறும் சிறப்பு கொரோனா தடுப்பு முகாம்கள், வாக்காளர் முகாம்கள், வரி வசூல் விளம்பரம் மற்றும் இதர பணிகளுக்கு மேற்படி பொருட்கள் தேவைப்படுகிறது. மேலும் மேற்படி பணிகளுக்கு வாடகைக்கு பொருட்கள் எடுக்கப்படும் பொழுது தோராயமாக மாதம் ரூபாய் 40,000/- செலவாகிறது. எனவே மேற்படி பொருட்களை சொந்தமாக வாங்குதற்கு ஆகும் உத்தேச தொகை ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 468/2022/எச்1)

தீர்மானம் எண்:- 108
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 30.09.2022 | **பொருள் எண் 8**<br>இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள பணிகள் மேற்கொள்ள ஏதுவாக போதுமான கணிணி மற்றும் இதர உபகரணங்கள் தேவைப்படுகிறது.<br>1. கணிணிகள் - 2 எண்ணிக்கை<br>2. பிரிண்டர் - 2 எண்ணிக்கை<br>3. ஸ்கேனர் - 1 எண்ணிக்கை<br>4. டோனர் - 50 எண்ணிக்கை<br>5. Keyboard - 5 எண்ணிக்கை<br>6. Mouse - 10 எண்ணிக்கை<br>7. USB Speaker - 3 எண்ணிக்கை<br>8. EPSON Ribbon Cartage - 5 எண்ணிக்கை<br>9. Micro Phone - 3 எண்ணிக்கை<br><br>மேற்படி பொருட்களுக்கு உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 925/2022/இ1) | **தீர்மானம் எண்:- 109**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.09.2022 | **பொருள் எண் 9**<br>**கூத்தாநல்லூர் நகராட்சியில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தவும், அணைத்து பகுதிகளுக்கும் தங்குத் தடையின்றி குடிநீர் சென்றடைவதற்கும் அம்ரூட்** 2.0 **திட்டத்தின் கீழ் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து வந்த அறிவுரையின்படி குடிநீர் சம்மந்தமான மென்பொருள் மூலம் வடிவமைக்கும் ஆலோசகரை நியமித்து மதிப்பீட்டில்** 1% **தொகைக்கு மிகாமல் ஆலோசனை கட்டணம் வழங்கவும், மேற்படி திட்ட அறிக்கை மற்றும் மன்பரிசோதனை, வரைபடங்கள் தயாரிக்க ஆகும் உத்தேச தொகை** 1% **மதிப்பீடு ரூ**.26.00 **இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. **மன்றம் அனுமதிக்கலாம். அம்ரூட்** 2.0 **ன் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி / பொதுநிதியின்கீழ் செலவு செய்யலாம்.**<br>2. **அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களிடம்** 06.05.2022 **அன்று முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்**<br>**(ந.க.எண்.** 412/2022/**இ1)** | **தீர்மானம் எண்:- 110**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td>30.09.2022</td><td>பொருள் எண் 10<br>கூத்தாநல்லூர் நகராட்சியில் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தவும், அனைத்து பகுதிகளுக்கும் தங்குத் தடையின்றி குடிநீர் சென்றடையவும் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் TUFIDCO நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><td>1</td><td>Sri Vitya Consultant செகந்திராபாத் Camp சென்னை</td><td>15 லட்சம் + 18% GST</td></tr>
<tr><td>2</td><td>Branden Consultancy Private Limited விசாகப்பட்டிணம்</td><td>23.35 லட்சம் + 18% GST</td></tr>
<tr><td>3</td><td>Fortre Consultancy Private Limited ஹைதராபாத்</td><td>29.5 லட்சம் + 18% GST</td></tr>
</table>
1. மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த Sri Vitya Consultant –ன் விலைப்புள்ளியினை ஏற்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 13.05.2022 அன்று முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 412/2022/இ1)</td><td>தீர்மானம் எண்:- 111<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.09.2022</td><td>பொருள் எண் 11<br>கூத்தாநல்லூர் நகராட்சியில் வருகிற 03.06.2023 அன்று டாக்டர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட உள்ளது. அவர்களுடைய பிறந்த நாள் நினைவை போற்றும் வகையில் இந்நகராட்சியின் முகப்பில் கலைஞர் 100வது பிறந்தநாள் விழா நினைவு நுழைவு வாயில் அமைத்திடவும், டாக்டர் கலைஞர் முழு உருவ சிலை அமைப்பதற்கு நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கினங்க அனுமதி மற்றும் நிதி ஒதுக்கிடு கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.923/2022/இ1)</td><td>தீர்மானம் எண்:- 112<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.09.2022</td><td>பொருள் எண் 12<br>தற்சமயம் வடகிழக்கு பருவமழைக்காலமாக இருப்பதால் இந்நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள மிகவும் சேதமடைந்த சாலைகளை பேட்ச் ஒர்க் மற்றும் தற்காலிக சீரமைப்பு பணிகள் செய்து தருமாறு நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கினங்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 922/2022/இ1</td><td>தீர்மானம் எண்:- 113<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>30.09.2022</td>
<td>

**பொருள் எண் 13**

**இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலகம் பின்புறம் தூய்மை இந்தியா திட்டம்** 2.O 2022-2023**ன் கீழ் நுன்னுயிர் உரமையம் அமைக்கும் பணிக்கு** 09.09.2022 **அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள வரப்பெற்றுள்ளது**.

<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த தொகை</td><td>ஒப்பந்தபுள்ளி தொகை</td><td>சதவிகிதம்</td></tr>
<tr><td>1</td><td>கலை கண்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி</td><td>1915573</td><td>1913164.12</td><td>0.13% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஜி.கலியமூர்த்தி ஒப்பந்ததாரர் கீழவாழாச்சேரி அத்திக்கடை</td><td>1915573</td><td>1945032.10</td><td>1.54% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள கலை கண்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.13% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

(ந.க.எண். 619/20225/இ1)

</td>
<td>

**தீர்மானம் எண்:- 114**

அனுமதிக்கப்பட்டது

</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>30.09.2022</td>
<td>பொருள் எண் 14<br>தேசிய வாழ்வாதார திட்டத்தின் கீழ் கூத்தாநல்லூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் தகுதியான சாலையோர வியாபாரிகள் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் கடித ந..க.எண்.20729/2021/UPA நாள் 16-06-2022 ன்படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தபுள்ளி 15-07-2022ல் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பட்டது.
<table>
<tr><td>1</td><td>MIRFICAL CAREERS PVT. LTD, NO, 12 A, second Floor, KM Building. T. Nagar. Coimbatore.</td><td>ரூ.600/- (Cost for Vendor)</td></tr>
<tr><td>2</td><td>BHARATH HR CONSULTANCY 3136 First Avenue rengasamy Naidu Layout Coimbatore</td><td>ரூ.850/- ( Cost for Vendor)+</td></tr>
</table>
கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோ மெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR CODE உடனான அடையாள அட்டை (ID CARD) தயாரித்து வழங்குதல், விற்பனை சான்றிதழ் (Certificate of Vendors) நகர தெரு விற்பனை திட்டம் (SLP) விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல் தொடர்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய MIRFICAL CAREERS PVT. LTD. ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 429/2020/எப்1)</td>
<td>தீர்மானம் எண்:- 115<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.09.2022</td>
<td>பொருள் எண் 15<br>இந்நகராட்சியில் 2021-2022 ஆம் ஆண்டு வருவாய் நிதி. மூலதனநிதி, மற்றும் குடிநீர் நிதி கணக்குகளின் வரவு செலவு திட்ட கணக்கு மற்றும் ஆண்டுக்கணக்குகள் தயார் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறை திருவாரூர், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அலுவலகங்களுக்கு அனுப்பிட வேண்டியுள்ளதால் மேற்படி 2021-2022 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட ஆண்டு கணக்குகள் தனியார் பட்டய கணக்கர் நிறுவனம் மூலம் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு சான்றிதழ் பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2508/2020/பி1)</td>
<td>தீர்மானம் எண்:- 116<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.09.2022</td>
<td>பொருள் எண் 16<br>இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு பட்டய கணக்கர் மூலம் சேமநல நிதி 2011 முதல் 2022 வரை வட்டி கணக்கீடு செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு</td>
<td>தீர்மானம் எண்:- 117<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அனுப்பி வைத்திடவும் சான்றிதழ் பெறுவதற்கும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**<br>**அலுவலக குறிப்பு**<br>**மன்றம் அனுமதிக்கலாம்** (ந.க.எண்.149/2021/பி1) | |
| 30.09.2022 | **பொருள் எண் 17**<br>**கூத்தாநல்லூர் நகர் பகுதிகளில் மின்விளக்கு இல்லாத இடங்களில் புதிய மின் விளக்குகள், புதிய மின் கம்பங்கள் அமைக்க நகர்மன்ற தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கினங்க இப்பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலக குறிப்பு**<br>**மன்றம் அனுமதிக்கலாம்.** (ந.க.எண். 238/2022/இ1) | **தீர்மானம் எண்:- 118**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.09.2022 | **பொருள் எண் 18**<br>கூத்தாநல்லூர் நகராட்சி பேருந்து நிலைய மேம்பாடு செய்யும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை, மென்பொருள் வடிவமைப்பு, செய்து TUFIDCO மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் திட்ட அறிக்கை ஒப்புதல் பெறுவதற்காக ஆலோசகர்களை நியமிக்கவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 11.06.2022-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 272/2013/இ1) | **தீர்மானம் எண்:-119**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.09.2022 | பொருள் எண் 19<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட மேல்கொண்டாழி, மரக்கடை, அக்கரை புதுத்தெரு, காடுவெட்டி மற்றும் புளியங்குடி ஆகிய இடங்களில் உள்ள கழிப்பிடங்களை பராமரிப்பு செய்வதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.2,00,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.968/2022/இ1) | **தீர்மானம் எண்:-120**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td>30.09.2022</td><td>பொருள் எண் 20<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான உபகரணங்கள் LAPTOP, AUTOCAD, SOFTWARE AND OTHER வாங்கும் பணிக்கு 22.09.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><table>
<tr><td>வ. எண்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>ஒப்பந்த தொகை</td><td>ஒப்பந்தபுள்ளி தொகை</td><td>சதவிகிதம்</td></tr>
<tr><td>1</td><td>பார்சித் டிரேடர்ஸ் திருச்சிராப்பள்ளி</td><td rowspan="2">1,00,000</td><td>98500</td><td>1.50% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>ஆர்.எஸ்.ஏ டிரேடர்ஸ் திருச்சிராப்பள்ளி</td><td>99500</td><td>0.25% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள பார்சித் டிரேடர்ஸ் திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 1.50% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.062/2022/எச்1)</td><td>தீர்மானம் எண்:-121<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.09.2022</td><td>பொருள் எண் 21<br>கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு தொந்தரவாகவும் அச்சுறுத்தலாகவும், நோய் பரப்பும் விதமாகவும் பன்றிகள் வளர்க்கப்பட்டு வருகிறது. மேற்படி பன்றிகள் உரிமையாளர்களிடம் அறிவிப்பு வழங்கியும் பலமுறை நேரில் அறிவுறுத்தியும் தற்போது வரை பன்றிகள் பொது இடங்களில் திரிய விட்டுள்ளனர். இது பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியதாகும். மேலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 240ன்படி மேற்படி பன்றிகளை திரிய விடுதல் குற்றமாகும். எனவே மேற்படி பன்றிகளை ஆல் இந்தியா பன்றி பிடிப்பவர்கள் மதுரை அவர்கள் மூலம் பிடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 929/2022/எச்1)</td><td>தீர்மானம் எண்:-122<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.09.2022 | பொருள் எண் 22<br>இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கான தி-கரன் சோசியல் டெவலப்மெண்ட் பவுன்டேஷன் நிறுவனத்திற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி ஊதியத்தில் தூய்மை மஸ்தூர்கள் பணி நடைபெற்று வருகிறது. தற்போது இந்நகர் மன்ற எண் 83 நாள் 30.08.2022ல் ரூ.10,83,706/-க்கு இப்பணிக்கான செலவின தொகை அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை ஊழியர்கள் சம்மேளனம் அவர்களின் கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் குறைந்தபட்ச கூலி என்பது தினக்கூலி நிர்ணயம் செய்ய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (அரசாணை எண் (2டி) 62 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 11.10.2017 அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளின் அடிப்படையிலும் மற்றும் நுகர்வோர் விலைவாசி குறியீட்டு எண் (Consumer Price Index) மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர் அறிக்கை அடிப்படையில் கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் பணியாளர்கள் பணிபுரியும் மாவட்டம், பணியிடம் அமைந்துள்ள பகுதிகளில் நிலவி வரும் விலைவாசி மற்றும் வாழ்வாதாரத்திற்கான அடிப்படை தேவைகள் ஆகியவற்றை கணக்கில் கொண்டு புள்ளியியல் துணை இயக்குனர் திருவாரூர் ந.க.எண். 1015/2022/ஆ3 நாள் 18.05.2022 அறிக்கையின்படி தமிழக அரசின் நிதித்துறை அரசாணை எண் 191 நிதி (CF) துறை நாள் 29.04.1998 வழிகாட்டுதல்படி தொடர்புடைய ஆவணங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அறிக்கை வெளியிடப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6631/2022/ஈ1 நாள் 27.06.2022 அடிப்படையில் மஸ்தூர்களுக்கு நாளொன்றுக்கு தினக்கூலியாக ரூ.440/- நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2022 முதல் அமுலுக்கு வந்துள்ளது. பணியாளர்கள் 01.04.2022 முதல் பணப்பயன்பெற தகுதியுடையவர்கள் என மேற்படி உத்தரவில் அறிவிக்கப்பட்டுள்ளது. கூத்தாநல்லூர் நகராட்சியில் இதுவரை அந்த உத்தரவு அமுல்படுத்தப்படவில்லை. எனவே உடனடியாக மேற்படி உத்தரவை அமுல்படுத்துவதோடு தினக்கூலி ரூ.440/- உயர்த்தி வழங்கும்படியும் கடந்த 01.04.2022 முதல் வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையையும் வழங்கிட நடவடிக்கை எடுக்கும்படி போராட்டம் நடைபெற்றது. எனவே ஊதியத்தினை மாற்றி அமைக்கவும் மேலும் அதற்கு உண்டான கூடுதல் செலவினத் தொகை ரூ.3,23,198/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 484/2019/எச்1) | **தீர்மானம் எண்:-123**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.09.2022 | பொருள் எண் 23<br>இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக தூய்மை பணியாளர்களை பணியமர்த்தும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 84, நாள் 30.08.2022 தீ-கரன் சமூக தொண்டு நிறுவனம் என்ற நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டு ரூ.26,00,000 லட்சத்திற்கு தற்போது வரை நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை ஊழியர்கள் சம்மேளனம் அவர்களின் கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் குறைந்தபட்ச கூலி என்பது தினக்கூலி நிர்ணயம் செய்ய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (அரசாணை எண் (2டி) 62 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 11.10.2017 அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளில் அடிப்படையிலும் மற்றும் நுகர்வோர் விலைவாசி குறியிட்டு எண் (Consumer Price Index) மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர் அறிக்கை அடிப்படையில் கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் பணியாளர்கள் பணிபுரியும் மாவட்டம், பணியிடம் அமைந்துள்ள பகுதிகளில் நிலவி வரும் விலைவாசி மற்றும் வாழ்வாதாரத்திற்கான அடிப்படை தேவைகள் ஆகியவற்றை கணக்கில் கொண்டு புள்ளியியல் துணை இயக்குனர் திருவாரூர் ந.க.எண். 1015/2022/ஆ3 நாள் 18.05.2022 அறிக்கையின்படி தமிழக அரசின் நிதித்துறை அரசாணை எண் 191 நிதி (CF) துறை நாள் 29.04.1998 வழிகாட்டுதல்படி தொடர்புடைய ஆவணங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அறிக்கை வெளியிடப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6631/2022/ஈ1 நாள் 27.06.2022 அடிப்படையில் தூய்மைப்பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு தினக்கூலியாக ரூ.440/- நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2022 முதல் அமுலுக்கு வந்துள்ளது. பணியாளர்கள் 01.04.2022 முதல் பணப்பயன்பெற தகுதியுடையவர்கள் என மேற்படி உத்தரவில் அறிவிக்கப்பட்டுள்ளது. கூத்தாநல்லூர் நகராட்சியில் இதுவரை அந்த உத்தரவு அமுல்படுத்தப்படவில்லை. எனவே உடனடியாக மேற்படி உத்தரவை அமுல்படுத்துவதோடு தினக்கூலி ரூ.440/- உயர்த்தி வழங்கும்படியும் கடந்த 01.04.2022 முதல் வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையையும் வழங்கிட நடவடிக்கை எடுக்கும்படி போராட்டம் நடைபெற்றது. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் திருவாரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6631/2022/ஈ1 நாள் 27.06.2022-ன்படி ஒருநாள் ஊதியம் மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதியையும் சேர்த்து ஊதியத்தினை மாற்றியமைக்கவும் மேலும் அதற்கு உண்டான கூடுதல் செலவினத்தொகை ரூ.7,77,556/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 484/2019/எச்1) | **தீர்மானம் எண்:-124**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.09.2022 | பொருள் எண் 24<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட பழைய நகராட்சி அலுவலக கட்டிடம் கட்டி சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும், பழுதடைந்து கட்டிடம் இடிந்து விழும் அபாயத்திலிருப்பதாலும், மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு NATIONAL INSTITUTE OF TECHNOLOGY DEPARTMENT OF CIVIL ENGINEERING, TRICHY அவர்களிடமிருந்து உத்தரவு கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கும், அந்த இடத்தை இடித்து அப்புறப்படுத்தி ஏலம் விடுவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 907/2021/இ1) | **தீர்மானம் எண்:-125**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.09.2022 | பொருள் எண் 25<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் கட்டி சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும், பழுதடைந்து கட்டிடம் இடிந்து விழும் அபாயத்திலிருப்பதாலும், மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு NATIONAL INSTITUTE OF TECHNOLOGY DEPARTMENT OF CIVIL ENGINEERING, TRICHY அவர்களிடமிருந்து உத்தரவு கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கும், அந்த இடத்தை இடித்து அப்புறப்படுத்தி ஏலம் விடுவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 272/20136/இ1) | **தீர்மானம் எண்:- 126**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/ திருமதி. மு.பாத்திமா பஷீரா
நகர்மன்ற தலைவர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் உத்தரவின்படி/

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி